**Tamil United National Organisations**
71-75 Shelton Street
London WC2H 9JQ
England
United Kingdom

**<u>Press Release</u>**

# மறைந்த மாவைஅவர்களுக்கு தமிழ் ஐக்கிய தேசியஅமைப்பின் கண்ணீர் அஞ்சலி



## அமரர் சோமசுந்தரம் சேனாதிராஜா
## யாழ் மாவட்ட முன்னாள் பாராளமன்ற உறுப்பினர்.
## தோற்றம்: 27.10.1942 மறைவு: 29.01.2025

தமிழரசுக் கட்சியின் மூத்த தலவர்களில் ஒருவரான மாவைசேனாதிராஜா அவர்கள் காலமாகிய செய்தி மிகவும் கவலைதருவதாகும். தனது மிக இளமைக் காலத்தில் அக் கட்சியின் தொண்டராக இணைந்த அவர் தனது இறுதிக் காலம் வரைசெயற்பட்டு அக் கட்சியின் ஓர் அடையாளமாகவேவாழ்ந்தார்.

தனது சேவைகாரணமாக அவர் அக் கட்சியின் உயர் பதவிகளில் இருந்தார் என்பதும் மிகவும் சிக்கலான காலங்களில் தீர்மானங்களைமேற்கொள்ளும் அளவுக்கு அவர் வளர்ந்திருந்தார். நாட்டில் குறிப்பாக உள் நாட்டுப் போர் தமிழ் மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்பைஏற்படுத்திய காலங்களில் அவரது கட்சியும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த வேளையில் இவர் மீதும் மிகவும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இவைஅவரது அரசியல் வாழ்க்கையின் இறுதிக் காலங்களில் பெரும் பின்னடைவைஏற்படுத்தின. இருப்பினும் தமிழ் மக்களின் அரசியல் ஜனனாயக போராட்டத்தில் ஒரு தளராத போராளியாக இறுதி வரைவாழ்ந்த ஓர் உன்னத மனிதர் ஆவார். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. என்றும் அவரது மறைவும், சேவையும் மக்கள் மத்தியில் நீங்காது நிற்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கும் **TUNO** சார்பில் ஆறுதலைப் பகிர்ந்து கொள்கிறோம்.

**TUNO ஊடகப் பிரிவு**

TUNO is based in the UK and working on to bring peace, harmony and prosperity to all in Sri Lanka by canvassing for an acceptable solution to the Tamil Question in North East Sri Lanka.

**TUNO Media Office - London, United Kingdom.**

Registered in England and Wales No. 13868168
Registered Office: 71-75 Shelton Street London WC2H 9JQ England United Kingdom
Email: contact@tamilunited.org | **www.tamilunited.org**